RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2531

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# Society in the Poems of the 'Pesum Puthiya Sakthi' Literary Magazine

**G. Yamini [a,*], A. Ramalingam [a]**

[a] Department of Tamil, Erode Arts And Science College, Rangampalayam, Erode-638009, Tamil Nadu, India

*Corresponding author Email: yaminig@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2531

Received: 08-05-2025; Revised: 21-07-2025; Accepted: 02-08-2025; Published: 09-08-2025

**Abstract:** Literary magazines, instead of being merely a source of entertainment, function as the conscience of society, a critic, and an instrument for change. Literary magazines are mirrors that reflect the true face of a society. Through stories, poems, and articles, these magazines bring to light the real problems that society faces, such as caste oppression, poverty, subjugation of women, political corruption, environmental degradation, and capitalist exploitation. 'Pesum Puthiya Sakthi' is a Tamil literary magazine. This magazine was started in the year 2000. It publishes literary articles, interviews, and poems. It has published the works of writers such as Gandhi M. Mehta, M. Gopalakrishnan, and Vittal Rao. This article examines the social perspective found in the poems published in the literary magazine 'Pesum Puthiya Sakthi'.

**Keywords:** Tamil literary Magazine, Society, Pesum Puthiya Sakthi, Real Problems

# பேசும் புதிய சக்தி இலக்கிய இதழின் கவிதைகளில் சமூகம்

**கு. யாமினி, [அ] *, அ. இராமலிங்கம் [அ]**

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

இலக்கிய இதழ்கள் என்பவை பொழுதுபோக்கு அம்சமாக இல்லாமல், அவை சமூகத்தின் மனசாட்சியாக, விமர்சகராக, மற்றும் மாற்றத்திற்கான கருவியாக செயல்படுகிறது. இலக்கிய இதழ்கள் ஒரு சமூகத்தின் உண்மையான முகத்தைக் காட்டும் கண்ணாடிகள். சாதி ஒடுக்குமுறை, வறுமை, பெண்ணடிமைத்தனம், அரசியல் ஊழல், சுற்றுச்சூழல் சீர்கேடு, முதலாளித்துவ சுரண்டல் போன்ற சமூகம் சந்திக்கும் உண்மையான பிரச்சினைகளை கதைகள், கவிதைகள், கட்டுரைகள் மூலம் இலக்கிய இதழ்கள் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றன. அவ்வகையில் பேசும் புதிய சக்தி என்ற இலக்கிய இதழில் வெளிவரும் கவிதைகளில் காணப்படும் சமூகப் பார்வையை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## இதழ் அறிமுகம்

பேசும் புதிய சக்தி என்பது தமிழ் இலக்கிய இதழாகும். இவ்விதழ் 2000 -ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது இலக்கிய கட்டுரைகள், நேர்காணல்கள் மற்றும் கவிதைகள் போன்றவற்றை வெளியிடுகிறது. இது ஒரு மாத இதழ் அல்லது பருவ கால மலர். இது எழுத்தாளர் காந்தி மு. மேத்தா, எம். கோபாலகிருட்டிணன் மற்றும் விட்டல்ராவ் போன்றோரின் படைப்புகளை வெளியிட்டுள்ளது.

**“ஒருவருமில்லை” - தனிமையும் போலியான சமூகமும்**

நவீன சமூகம் மனிதனுக்குள் ஏற்படுத்தியுள்ள உணர்ச்சிபூர்வமான தனிமை மற்றும் முகமூடி அணிந்த வாழ்க்கை ஆகியவற்றை சமூக உளவியல் பார்வையில் விமர்சிக்கிறது.

“பேசத் தெரியுமெனப்

பேசிக் கொண்டேயிருக்கிறான்

ஒருவன்,

எழுதத் தெரியுமென

எழுதிக்கொண்டேயிருக்கிறான்

ஒருவன்,” (Mubarak, 2025)

போன்ற வரிகள் ஒவ்வொருவரும் தங்கள் இருப்பை நிரூபிக்க, தங்களுக்குத் தெரியாததைக்கூட தெரிந்ததைப் போல் காட்டிக்கொள்கின்றனர் என்பதை உணர்த்துகிறது. அடையாளச் சிக்கலாகவும் இதை பார்க்க முடிகிறது. சமூகத்தில் ஒருவன் தன் அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டு, தான் இல்லாதவனாகவே நடிக்கிறான். இந்த கவிதை இறுதியில் “தெரிந்து கொள்ள மட்டும் இங்கு ஒருவருமில்லை” என முடிப்பதன் மூலம் எந்த ஒர மனிதனும் மற்றவர்களின் உண்மையான உணர்வுகளைப் புரிந்துகொள்ளவோ, அல்லது உண்மையான உதவிக்கு வரவோ தயாராக இல்லை என்ற சமூகத்தின் உள்வெறுமையைப் பதிவு செய்கிறது. இக்கவிதையை வாசிக்கும்போது திருக்குறளின் கேள்வி என்ற அதிகாரத்தின் குறள்களைப் பொருத்தலாம். உதாரணமாக,

“செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்

அவியினும் வாழினும் என்.” (Sarathi, 2011)

உண்பது மட்டும் வாழ்க்கையல்ல, அறிவைத் தேடி நல்லவற்றைக் கேட்டறிந்து செயல்படுவதே மனித வாழ்வின் பயன், எனவே தெரியாதவற்றை தெரிந்துக்கொள்ளும் ஆர்வம் இல்லையெனில், அந்த வாழ்க்கை பயனற்றது என்று வள்ளுவர் கூறும் கருத்தும் இக்கவிதையோடு பொருந்துகிறது.

“பாடம்” - இயற்கையின் மீதான சுரண்டலும் மனித வாழ்வின் நிலையாமையும்

சாலையோரத்தில் தூசி படிந்துக் கிடக்கும் ஒரு மரத்தைப் பற்றிப் பேசும் இந்தக் கவிதை, மனித வாழ்வின் நிலையாமையையும், இயற்கையின் மீதான நமது அலட்சியத்தையும் சமூகச் சூழலியல் கண்ணோட்டத்தில் விளக்குகிறது.

“இலை முழுதும்

புழுதி..

இரவும் பகலும்

இடைவிடா

இரைச்சல்.

வாழ்நாள் முழுவதும்

வாகனப் புகை புழுக்கம்.

இத்தனை

சிரமங்களுக்கிடையிலும்

பூக்கும்காலம் வந்தவிட்டால்

அழகழகாய்ப் பூத்துக்கொண்டு

தானிருக்கின்றன

சாலையோர மரங்கள்…" (Sathyamoorthi, 2025)

நகரமயமாக்கல் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றால் இயற்கை அனுபவிக்கும் வன்முறையை இக்கவிதையில் அழகாகப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும், பூக்கும் காலம் வந்துவிட்டால் அழகாய் பூத்துக்கொண்டு தானிருக்கின்றன சாலையோர மரங்கள் என்று கவிதை முடிகிறது. மனித வாழ்வும் சிரமங்கள் நிறைந்ததாக இரந்தாலும், இயற்கையைப் போலவே மறுபடியும் பூத்துச் சிரமங்களைத் தாண்டி வாழ வேண்டும் என்ற ஒரு முக்கியமான வாழ்வியல் பாடத்தைச் சமூகத்திற்கு உணர்த்துகிறார் கவிஞர் எனலாம்.

"சத்தமில்லாத தீபாவளி" - வர்க்கப் பிரிவினையும் ஏழ்மையும்

இந்தக் கவிதை சமூகத்தில் நிலவும் கடுமையான பொருளாதார ஏற்றத்தாழ்வை மையப்படுத்துகிறது.

"இந்த முறை

தீபாவளி போனஸ்

இல்லையென்று

அணுக்குண்டு வெடித்தது போன்ற

முதல் பட்டாசு!

எப்படியும்

இந்த முறையாவது

ஆண்ட்ராய்டு போன் வாங்கிட

ஆசைப்பட்ட

அம்மாவுக்கு,

புஸ்வானமாகியது

இரண்டாவது பட்டாசு!" (Prabhakar Suppaiya, 2025)

என்று போனஸை நம்பி திட்டமிட்டிருந்த பட்ஜெட் அத்தனையும் வெடித்துச்சிதறியதாய் உணர்த்தக்கூடிய இக்கவிதை தீபாவளி போனஸ் குறித்த ஏக்கம், தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்புச் சுரண்டலை வெளிப்படுத்துகிறது. பண்டிகையின் மகிழ்ச்சியைக் கூட பணம் திர்மானிக்கிறது என்ற சமூக உண்மையை பதிவு செய்கிறது. தீபாவளிப் பட்டாசு, இனிப்பு, புத்தாடை என எதற்கும் வழியில்லாத ஒரு குடும்பத்தின் வறுமை நிலையை அவலமாகக் காட்டுகிறது.

நாங்கள் எப்போது பட்டாசு வெடிக்கலாமென்று? என்ற இறுதிக் கேள்வி வறுமையின் பிடியில் சிக்கிய குழந்தைகளின் ஏக்கத்தையும், அதற்கான தீர்வைச் சமூகம் தேட வேண்டும் என்ற சமூகப் பொறுப்புணர்வையும் சுட்டிக்காட்டுகிறது.

## கவிதை மொழி மற்றும் சமூகத்திற்கான பங்களிப்பு

'பேசும் புதிய சக்தி' இதழின் கவிதைகள், நேரடியான மற்றும் வலிமையான மொழி நடையைக் கையாள்கின்றன. அலங்கார வார்த்தைகளைக் குறைத்து, சமூக அவலங்களை நேரடியாகவும் துணிச்சலுடனும் பதிவு செய்கின்றன. 'சத்தமில்லாத தீபாவளி' கவிதையில் வரும் வரிகள் வறுமையின் வலியைத் தீவிரமாக்குகின்றன.

'ஒருவருமில்லை' என்ற கவிதையில் தனித்த நிற்கும் ஒருவனின் நிழல், சமூகத் தனிமைக்கான வலுவான படிமமாக அமைகிறது. 'பாடம்' கவிதையில் புழுதி படிந்த சாலை மரம், போராட்டத்தின் மத்தியிலும் நம்பிக்கையின் குறியீடாக வெளிப்படுகிறது.

## முடிவுரை

பேசும் புதிய சக்தி இலக்கிய இதழானது, வெறும் பொழுதுபோக்கு இலக்கியத்தைத் தாண்டி. சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகச் செயல்பட்டுள்ளது தெளிவாகிறது. வர்க்கப் போராட்டம், தனிமனிதத் துயரம், சுற்றுச்சூழல் அக்கறை எனப் பல அடுக்குகளில் சமூகத்தின் சிக்கல்களை இந்தக் கவிதைகள் அம்பலப்படுத்துகின்றன. இந்த இதழானது, சமகாலச் சமூகத்தின் பிரச்சினைகளை வாசகனுக்குக் கடத்தி, சமூக விழிப்புணர்வைத் தூண்டும் முக்கியமான பணியைச் செய்துள்ளது என்றால் மிகையாகாது.

## References

Mubarak. M (2025), Pesum Puthiya Sakthi Monthly Magazine, Issue - 9, Thiruvarur, India

Prabhakar Suppaiya (2025), Pesum Puthiya Sakthi Monthly Magazine, Issue - 9, Thiruvarur, India

R.P. Sarathi (2011), Thirukkural Easy Commentary, Kizhakku Publications, Chennai, India

Sathyamoorthi (2025), Pesum Puthiya Sakthi Monthly Magazine, Issue - 9, Thiruvarur, India

## Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

G. Yamini, A. Ramalingam, Society in the poems of the 'Pesum Puthiya Sakthi' literary magazine, Indian Journal of Tamil, 6(3), (2025) 1-4. https://doi.org/10.54392/ijot2531